ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)



சத்திரப்பட்டி சாலை,
வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்



நாள் :
25, தை 2026

Date:
08, Febuary 2026

www.vedaneri.org

வகுப்பு 23

# அழுக்காறாமை

(பொறாமைப்படாதிருத்தல்)

- பிறன் ஆக்கம் கண்டு பொறுத்துக்கொள்ள முடியாத தன்மை இல்லாமை.
- பொறாமை பொறுத்துக் கொள்ளுதலுக்கு எதிரியாதலால் பொறையுடைமையின் பின் வைக்கப்பட்டது.

அழுக்காறு = பொறாமை. முதனிலை திரிந்த தொழிற்பெயர்.

அழுக்காறாமை = அழுக்காற்றைச் செய்யாமை.

அழுக்கறுத்தல் என்னும் தொழிற்பெயர் விகுதி கெட்டு முதனிலை திரிந்து அழுக்காறு என வந்தது.



- ஒருவன் காமத்தினால் பிறருக்குத் தீங்கு செய்து தர்மம் தவறலாம். அதனால் அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை போன்றவை சொல்லப்பட்டன.

- பிறர் தீங்கு செய்தபோது பொறுத்துக் கொள்ள முடியாமையினால் எதிர்வினையாகத் தீங்கு செய்து தர்மம் தவறலாம். அதனால் பொறையுடைமை சொல்லப்பட்டது.

- பொறாமையினால் பிறருக்குத் தீங்கு செய்து தர்மம் தவறலாம். அதனால் அழுக்காறாமை சொல்லப்படுகிறது.



**குறள்கள்: 1, 2 - அழுக்காறு இல்லாமையின் குணம்**

1. அழுக்காறின்மை நன்மையைப் பயக்கும். உயிரினும் மேலாகக் கருதவேண்டும்.
2. எல்லாச் செல்வங்களுள்ளும் சிறந்த செல்வம்.

**குறள்: 3 - 8 - பொறாமை உடைமையினது குற்றம்**

3. பொறாமைப்படின் தனக்கே துன்பம்
4. இருமையிலும் துன்பம் வரும்
5. கேட்டைத் தரும் பெரும்பகை
6. வறுமை வரும். உற்றாரும் கெடுவர்.
7. ஸ்ரீதேவி நீங்கி மூதேவி வருவாள். (செல்வம் நீங்கும், வறுமை வரும்.)
8. இம்மை செல்வத்தைக் கெடுத்து, மறுமையில் நரகத்தில் தள்ளும்.

**குறள்கள்: 9, 10**

செல்வமும் வறுமையும் வருவதற்குக் காரணம்.




1. ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சம்
அழுக்காறு இலாத இயல்பு.

ஒருவன் தன் மனதில் பொறாமை இல்லாத தன்மையை ஒழுக்கத்தைப் போல உயிரினும் மேலாகக் கொள்ள வேண்டும்.

இயல்பு = அறிவோடு கூடிய தன்மை.

ஒருவன் தன் மனதில் உள்ள பொறாமை எனும் அழுக்கினை அறிவினால் நீக்கி ஒழுக்கம் போல உயிரை விட மேலானதாகக் கருதி (பொறாமையில்லாமையைக்) காப்பாற்றவேண்டும்.



## 2. விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின்.

எவரிடத்திலும் பொறாமையிலிருந்து நீங்குதலை ஒருவன் பெற்றான் என்றால் மேலான பேறுகளுள் அப்பேற்றினை ஒத்திருப்பது இல்லை.

விழுப்பேறு = சிறந்த செல்வம்
யார்மாட்டும் = பகைவரிடத்தும்
அன்மை = வேறாதல்

ஒருவன் யாரிடத்திலும் பொறுமை கொள்ளாதிருந்தால் சிறந்த செல்வங்களுளெல்லாம் அதற்கு ஒப்பான செல்வம் இல்லை. ஏனெனில் பொறாமை இல்லாத மனதில் அமைதியும் நிறைவும் இருக்கும்.

பொறாமை இன்மையே ஒப்பற்ற செல்வம்.



## 3. அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம் பேணாது அழுக்கறுப் பான்.

(மறுமைக்குப்) புண்ணியமும் (இம்மைக்குச்) செல்வமும் தனக்கு வேண்டாம் என்று சொல்லப்படுவோன் பிறனுடைய செல்வத்தைப் பார்த்து மகிழாமல் பொறாமைப்படுதலைச் செய்வான்.

அறன் = புண்ணியம்
ஆக்கம் = செல்வம்

பொறாமை எனும் தீயகுணமானது இப்பிறவியில் இன்பமாக வாழத் தேவையான செல்வமும் மறுமையில் இன்பமாக வாழத் தேவையான புண்ணியமும் இல்லாமல் செய்துவிடும்.



# 4. அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின் ஏதம் படுபாக் கறிந்து.

பொறாமைப்படுதல் என்னும் தீயநெறியால் துன்பம் இருமையிலும் உண்டாகும் என்பதை (அறநூல்களின் வாயிலாக) அறிந்து பொறாமையினால் பிறருக்கு தீயன செய்யமாட்டார் அறிவுடையோர்.

அழுக்காற்றின் = பொறாமை கொண்டு
அல்லவை = அறமல்லாதன = பிறருக்குத் தீமையானவற்றை நினைத்தலும் சொல்லுதலும் செய்தலும்.
ஏதம் = துன்பம்.

அறநூல்களைக் கற்ற அறிவுடையவர்கள் பொறாமையினால் பிறருக்கு துன்பம் தரும் செயல்களை - அதனால் தமக்குப் பாபம் வரும் என்று அறிந்திருப்பதனால் - முக்கரணங்களாலும் செய்யமாட்டார்.



5. அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடீன் பது.

பொறாமையானது பகைவரை அழித்தும் கேட்டைத் தரும் ஒன்றாகும். ஆகவே அப்பொறாமையை உடையவர்களுக்கு (கேட்டைத் தருவதற்கு பகைவர் வேண்டாம்) அப்பொறாமையே போதும்.

ஒன்னார் = பகைவர்
வழுக்கியும் = அழித்தும்
அது சாலும் = அதுவே போதும்.



ஒருவன் புறப்பகைவரை அழித்து வெற்றி பெற்றிருந்தாலும் பொறாமை அவன் மனதில் இருந்தால் அவன் அழிவதற்கு அது ஒன்றே போதும்.

பொறாமையே துன்பத்தைத் தரும் பெரும்பகையாகும்.

## 6. கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.

(ஒருவனால் பிறருக்குக்) கொடுக்கப்படும் பொருள்களின் மீது பொறாமை கொள்பவனது உறவுகள் உண்பதற்கும் உடுப்பதற்கும் பொருட்கள் இல்லாமல் அழிந்து போகும்.



கொடுப்பது = கொடுக்கப்படும் பொருட்கள்.

பிறருக்கு கொடுக்கப்படும் பொருள்களின் மீது பற்று கொண்டு தனக்கு கிடைக்கவில்லையே என்று பொறாமை கொள்பவனுடைய உறவினர்கள் செல்வம் இல்லாமல் அழிந்து போவர்.

சுற்றம் கெடும் என்று சொல்லப்பட்டதன் மூலம் அழுக்காறு உடையவனது கேடு சொல்லாமலே பெறப்பட்டது.

## 7. அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்.

அழுக்காறு உடையவனை திருமகள் தானும் பொறாமைப்பட்டு தமது மூத்தவளுக்கு காண்பித்து விட்டுவிடுவாள்.

அவ்வித்து = பொறாமை கொண்டு
செய்யவள் = திருமகள் - லக்ஷ்மி தேவி
தவ்வை = மூத்தவள் = மூதேவி. தவ்வையை - உருபு மயக்கம், தவ்வைக்கு எனும் பொருளில் வந்துள்ளது.

பொறாமை கொண்டவனை மூதேவிக்குக் காட்டிவிட்டு ஸ்ரீதேவி விலகி விடுவாள்.

பொறாமை கொண்டவன் செல்வம் நீங்கி வறுமை அடைவான் என்பது பொருள்.

## 8. அழுக்காறு எனவொரு பாவி திருச்செற்றுத் தீயுழி உய்த்து விடும்.

பொறாமை என்று சொல்லப்படும் ஒரு ஒப்பற்ற பாவியானவன் (தன்னை உடையவனை) செல்வத்தை அழித்து நரகத்தில் தள்ளிவிடுவான்.

தீயுழி = நரகம்.
பாவி = குணமாகிய பொறாமை குணியாக (குணத்தை உடைவனாக) உருவகப்படுத்தப்பட்டது. இது ஹேது உருவக அணி.

குணம் குணியைச் சார்ந்தது என்றாலும் பொறாமை குணத்திநுடைய இருமையிலும் கெடுக்கின்ற கொடுமையைப் பற்றி அதையே குணியாக்கி பாவி என்றார்.


இவை ஆறுபாட்டாலும் பொறாமையுடைமையினது குற்றம் கூறப்பட்டது.

# 9. அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்.

பொறாமை உடையவனது செல்வமும் செம்மை உடையவனது வறுமையும் உண்டானவிடத்து ஆராயப்படும்.

அவ்விய நெஞ்சத்தான் = பொறாமையுடையவன்
செவ்வியான் = செம்மையுடையவன் = நடுவுநிலைமையுடையவன்.
நினைக்கப்படும் = காரணமென்ன என்று ஆராயப்படும்.

பொறாமை உடையவன் ஆக்கம் அழியும் என்பது இவ்வதிகாரத்தில் சொல்லப்பட்டது. செவ்வியான் செல்வம் பெறுவன் என்பது நடுவுநிலைமை ஒழுக்கமுடைமை அதிகாரங்களில் சொல்லப்பட்டது. இந்த நியதிக்கு மாறாக பொறாமை உடையவனிடத்தில் செல்வமும் ஒழுக்கம் உடையவனிடத்தில் வறுமையும் இருந்தால் அதற்குக் காரணம் பழவினை என்று அறிவுடையவர் எண்ணுவர்.



## 10. அழுக்கற்று அகன்றாரும் இல்லை அஃதில்லார் பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல்.



பொறாமைப்படுதலைக் செய்து பெரியவர் ஆனவரும் இல்லை; பொறாமை இல்லாதவர்களுள் செல்வத்திலிருந்து நீங்கியவரும் இல்லை.

அழுக்கற்று = அழுக்காறு உற்று (அடைந்து). அழுக்கறல் தொழிற்பெயர். அழுக்கற்று என்பது இறந்த கால வினையெச்சம்.
அகன்றார் = அகன்றவர் = செல்வம் உடையவர்.
பெருக்கம் = செல்வம்.

பொறாமைப்பட்டுச் செல்வமடைந்தவரும் இல்லை. பொறாமை இல்லாமையினால் வறுமை அடைந்தவரும் இல்லை.

இவை இரண்டு பாட்டாலும் கேடும் ஆக்கமும் வருவதற்கு ஹேது - காரணம் - கூறப்பட்டது.

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami_om_karananda
3. Facebook - Swami omkarananda
4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam
5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam


94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com